
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1194

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




– வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

170

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

# கலைஞர் எழுதுகோல் விருது- சிறந்த தமிழ் உச்சரிப்பு விருது! சான்றோரைப் போற்றிய நல்அரசு!







தமிழர் நலனுக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் ஊறு என்றால், பொங்கி எழு என்பார் பாவேந்தர் பாரதிதாசன். ஆனால், திராவிட இயக்கமாக தி.மு.க. ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பின்னர், தமிழ், தமிழர் நலனைக் காப்பதற்கு எண்ணற்ற வகையில், சட்டத்திட்டங்களை உருவாக்கி, உலக அரங்கிற்குக் கொண்டு சென்றதை அறிவோம். அதன் தொடர்ச்சியாக, கடந்த ஐந்து ஆண்டுக்கால திராவிட மாடல் ஆட்சியில் செயல்படுத்திய தமிழ் வளர்ச்சித் துறை திட்டங்கள்தான் 'கலைஞர் எழுதுகோல் விருது' மற்றும் 'தமிழ் உச்சரிப்பு விருது'கள். குறிப்பாக, ஊடகத் துறையில் பணியாற்றி, தமிழுக்கு பெருமை சேர்ப்போருக்கு இந்த விருதுகள் பெருமை சேர்த்தன.

### தமிழ் உச்சரிப்பு விருது

*2022-2023-ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையின் போது, ஊடகங்களில் தமிழ்ச் செய்திகளைப் பிழையில்லாமலும், சரியான உச்சரிப்புடனும் வழங்குபவர்களை ஊக்குவிக்க, ஆண்டுதோறும் நான்கு பேருக்கு தலா ரூ. 25,000 பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.*

ஊடகங்களில் தமிழ்ச் செய்திகளைத் தவறில்லாமலும், அழகாகவும் சரியாகவும் உச்சரிக்கும் செய்தி வாசிப்பாளர்கள், நேர்காணல் செய்பவர்கள் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில், இந்தத் திட்டம் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, சிறந்த தமிழ் உச்சரிப்புக்கான விருதாளர்களைத் தேர்வு செய்வதற்கு ஏதுவாக, அனைத்துக் காட்சி ஊடக நிறுவனங்களிடம் இருந்து ஆர்வமுள்ள தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

விண்ணப்பதாரர்கள், தங்களைப் பற்றிய குறிப்புகளுடன் 'நா பிறழ் தொடர்களை' (tongue twisters) உச்சரித்து, அதனைக் காணொலியாகப் பதிவு செய்து சமர்ப்பித்தனர். இந்த வீடியோக்கள் தேர்வுக்குழுவின் முன் காட்சிப்படுத்தப்பட்டு, அதன் அடிப்படையில் விருதுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

*2023-2024-ஆம் ஆண்டில் இவ்விருதிற்கென தகுதியானவர்களாக முனைவர் வா.கி. சர்வோதய ராமலிங்கம், வேதவள்ளி செகதீசன், ஜோ.அருணோதய சொர்ணமேரி, ப.மோகன்ராஜ் ஆகிய நான்கு ஊடகவியலாளர்கள் தெரிவு செய்யப்பட்டு சென்னை, தலைமைச்செயலகத்தில் அன்றைய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களால் 08.09.2025 அன்று சிறந்த தமிழ் உச்சரிப்பு விருது ஒவ்வொருவருக்கும் ரூ.25,000 ஊக்கத் தொகையுடன் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.*

### கலைஞர் எழுதுகோல் விருது

*2021-22-ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையில், வெளியிட்ட மற்றொரு அறிவிப்பாக, இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றிவரும் ஒரு சிறந்த இதழியலாளருக்கு ஆண்டுதோறும் 'கலைஞர் எழுதுகோல் விருது' மற்றும் ஐந்து இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இவ்விருது ஒவ்வோர் ஆண்டும் கலைஞர் பிறந்த நாளான ஜூன் 3-ஆம் தேதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.*

*இதன்படி, தேர்வுக் குழுவின் பரிந்துரையின் பேரில், 2021-ஆம் ஆண்டிற்கான 'கலைஞர் எழுதுகோல் விருது' மூத்த பத்திரிகையாளர் ஐ.சண்முகநாதனுக்கு வழங்கப்பட்டது. 2022-ஆம் ஆண்டிற்கான 'கலைஞர் எழுதுகோல் விருது' மூத்த பத்திரிகையாளர் வி.என்.சாமி அவர்களுக்கும், 2023-ஆம் ஆண்டின் சிறந்த இதழியலாளருக்கான 'கலைஞர் எழுதுகோல் விருது' மூத்த பத்திரிகையாளர் 'நக்கீரன்' கோபால் மற்றும் கலைஞர் நூற்றாண்டு சிறப்பு விருதாக பத்திரிகையாளர் சுகிதா சாரங்கராஜ் ஆகியோருக்கும் வழங்கப்பட்டது. 2024-ஆம் ஆண்டுக்கான விருதினை, மூத்த பத்திரிகையாளர் சுகுமார் பெற்றார்.*

*வெற்றி பெற்றவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும், திராவிட மாடல் நாயகர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக அவர்களுக்கு விருதினை வழங்கி சிறப்பு செய்துள்ளார்.*

*ஒவ்வொரு துறையிலும் அங்கீகாரம் பெறத் துடிப்போரை, அடையாளம் கண்டு அவர்களைப் பெருமைப்படுத்தியதும், மூத்தோரைப் போற்றியதும் தமிழ்நாட்டின் வரலாற்றில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சிக்காலம் பொற்காலமாக எழுதி வைக்கும்.*

**...சாதனை தொடரும்**

### சிறந்த தமிழ் உச்சரிப்புக்கான 'நா பிறழ் தொடர்'!

மை அனலில் பற்றிய அணுப் போன்ற அனலால் அனு வெந்து போனது. அணுக்கத்தார் அனுக்கம் என்றும் தொல்லை அண்ணத்தில் அன்னம் படலாமா; கன்னம் படலாமா? கன்னி அணிந்த கண்ணி காணத்தில் வந்ததா? கானத்தில் சேர்ந்ததா? அலம் பிடித்தால் அளம் வருமோ? அளைக்குள்ளே புகுந்த அலை அழைத்து வருமோ? கறையானை அவள் அல்லில் செய்த அவலை அள்ளி எடு, ஒலியும் ஒளியும் ஒழிந்து போனால், ஒள் உளதாகுமோ? கழகத்தார் ஆடும் கழங்கு கலகம் விளைக்குமா? களங்கம் தருமா? அரம் கொண்டு அறம் அரியலாமா? அரியை அறியா அரிவை அருவை அறுத்த இறவியன்றோ? ஒருத்தலை ஒறுத்து ஒருவினால் ஒறுவு இலதாகுமோ?. தமிழுக்குக் கரையில்லை கறுப்பென்பது கறையுமில்லை.

> **"அங்கீகாரம் பெறத் துடிப்போரை, அடையாளம் கண்டு அவர்களைப் பெருமைப்படுத்தியதும், மூத்தோரைப் போற்றியதும் தமிழ்நாட்டின் வரலாற்றில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சிக்காலம் பொற்காலம்."**

### கருத்தியலுக்காக விழுந்த வாக்குகள் அல்ல!

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத சூழலில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகித்த இடதுசாரிகள், வி.சி.க. உதவியுடன் புதிய அரசு அமைகிறது. நிலையான ஆட்சி தோழமைக் கட்சிகள் எடுத்த முடிவை, மதிப்பதாக வரவேற்று எதிரிகளும் வியக்கும் வண்ணம் உயர்ந்திருக்கிறார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். இந்தச் சூழலில், 'இந்த ஆட்சி மாற்றம் என்பது கருத்தியல் அடிப்படையிலானது அல்ல' எனப் பதிவிட்டுள்ளார் திராவிட இயக்கச் செயற்பாட்டாளர் அருண் கோமதி.

"தி.மு.க. 10 வருடங்களுக்குப் பின் ஆட்சிக்கு வருகிறது. ஆட்சியில் இருந்த ஐந்து வருடங்களும் சிறப்பாகவே செயல்பட்டு இருக்கிறது. ஓர் அரசு அப்போதைய சூழ்நிலையில், என்ன மாதிரியான பொருளாதாரத் திட்டங்களையும் வளர்ச்சித் திட்டங்களையும் வகுக்க வேண்டுமோ அதை செவ்வனே செய்திருக்கிறது. குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டமும், மகளிருக்கான இலவசப் பேருந்தும் இந்த ஆட்சியின் மணிமகுடம். இவ்வளவு செய்தும் எந்தக் காரணமும் இல்லாமல் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டதை ஏற்றுக்கொள்வது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. இதை கருத்தியல் ரீதியாக அணுகும் அளவிற்கு தி.மு.க. பெற்றது கருத்தியல் தோல்வியும் அல்ல. நடிகரின் பின்னால் திரண்ட 34 சதவிகித வாக்காளர்களின் தவற்றினால் தி.மு.க. தோல்வியைச் சந்தித்து இருக்கிறது.

ஆட்சி மாற்றம் வேண்டும் என்ற காரணத்தால் தி.மு.க. தோற்கடிக்கப்பட்டிருக்கிறது என்பது ஓர் உண்மையான வாதம் கிடையாது. தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் வேண்டாம் என்று நினைத்து இருந்தால், தி.மு.க. அ.தி.மு.க. கூட்டணிகளுக்கு 59 சதவிகிதம் வாக்கு கிடைத்திருக்காது. ஒரு பெரும் ரசிகர் கூட்டம் குறிப்பாக, வீடுகளில் இருக்கும் 'துள்ளாத மனமும் துள்ளும்', 'காதலுக்கு மரியாதை' ரசிகைகள் எந்த அரசியல் புரிதலும் இன்றி சென்று வாக்களித்திருக்கிறார்கள். ஒவ்வொரு தேர்தலிலும் மாற்றம் வேண்டும் என வாக்களிப்பவர்கள் 10-லிருந்து 15 சதவிகிதம் இருக்கத்தான் செய்வார்கள். அது இந்தத் தேர்தலிலும் இருந்திருக்கும். அதைத் தாண்டி ரசிக மனப்பான்மையில் வாக்குகள் விழுந்ததே தவிர, இதற்கு எந்த ஒரு கருத்தியல் முற்போக்குச் சாயலையும் பூச வேண்டிய அவசியம் கிடையாது" என நீள்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்




### திருக்குவளைத் தீந்தமிழ்!



நீரை.அத்திப்பூ

சென்னை, ராஜா அண்ணாமலைபுரம் இமேஜ் அரங்கத்தில், இந்திய அஞ்சல் துறையின் புதிய நவீன சேவைகள் தொடக்க விழாவை, அப்போதைய ஒன்றிய அமைச்சர் தயாநிதி மாறன் தலைமையில், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார். ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அந்த நிகழ்ச்சியைத் தொடக்கம் முதல் நிறைவுரை வரை நிரல்படத் தொகுப்புரை செய்யும் பேறு எனக்குக் கிடைத்தது. இவை போன்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்த நிகழ்ச்சிகளில் நிகழ்த்திய தொகுப்புரைக் குறிப்புகளை, 'திருக்குவளைத் தீந்தமிழ்' என்ற நூலாகத் தொகுத்து, அவரது நினைவுகளைப் போற்றி நிற்பது என் பேறு.

**– கவிப்பேரொளி நீரை.அத்திப்பூ**
**(சே.அப்துல் லத்தீப்)**
**அஞ்சல் பயிற்சி மைய மேனாள் உதவி இயக்குநர்,**
**நீர்முளை, திருக்குவளை, நாகப்பட்டினம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு… கழக வரலாறு

### திரைப்படமாக்கப்பட்ட மாநாடு!

1958-ஆம் ஆண்டு மார்ச் 8, 9 ஆகிய தேதிகளில், பழனியில் கழகத்தின் 3-வது மாவட்ட மாநாடு நடைபெற்றது. கழகத்தின் முதல் களப்பலியான மொய்தீன் பிச்சையின் பெயரில் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. மாநாட்டுப் பந்தலின் நுழைவுவாயிலில் கோட்டைக்குள் நுழைவதைப் போன்ற தோற்றத்தில் அமைக்கப்பட்டிருந்தது. ஒருபுறம் அண்ணாவின் ஆளுயர படமும், இன்னொரு புறம் சௌந்தரபாண்டியனாரின் படமும் வைக்கப்பட்டிருந்தன. மாநாட்டின் 2 நாள் நிகழ்ச்சிகளும் திரைப்படமாக்கப்பட்டன. இயக்குநர் எம்.ஏ.திருமுகம் உதவியுடன் லால் என்பவர் படம்பிடித்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900